



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு ஜல்லிக்கட்டு விழாவில் பங்கேற்பது குறித்தும் இளைஞர் அணி மாநாடு குறித்தும் நடைபெற்ற மதுரை தெற்கு மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றதில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் – வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் பாண்டியன், கே.ஐ.மகிழன், தொகுதி பொறுப்பாளர்கள் சிவகாசி வனராஜா, டிஸ்கோ அலாவுதீன், கழக நிர்வாகிகள் லதா அதியமான் பி.எஸ்.என்.எல். செல்வம், தங்கப்பாண்டியன், மதன், கே.எஸ். ராமமூர்த்தி, ஸ்ரீதர், சிவனாண்டி, சுதாகரன், சிவமுருகன், தனபாண்டியன், இளைஞர் அணி விமல், ஆதவன் அதியமான், திருமங்கலம் நகராட்சி சேர்மன் ரம்யா முத்துக்குமார் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றார்கள்.

# மிரட்டல்!



**"தன் வசமுள்ள விசாரணை அமைப்புகளை காட்டி**
**கட்சிகள் மற்றும்**
**அதன் தலைவர்கள்**
**தொண்டர்களின்**
**விருப்பங்களுக்கு**
**மாறான கூட்டணி!**
**முடிவெடுக்க மிரட்டும்**
**அரசியலை நாட்டின்**
**உள்துறை அமைச்சர்**
**தமிழ்நாட்டில் முகாமிட்டு**
**மேற்கொண்டு**
**வருவதை மக்கள்**
**கவனிக்கிறார்கள்...**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

### ஒன்றியப் பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாடு!

# வள்ளியூரில் திராவிட பொங்கல் விழா - மாரத்தான் போட்டி!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – ம.கிரகாம்பெல்– ஞானதிரவியம் துவக்கி வைத்தனர்!

நெல்லை, ஜன.12-

நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூரில் திராவிட பொங்கல் முன்னிட்டு தி.மு.க சார்பில் வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் ஆண் பெண் (இருபாலர்) 800 பேர்கள் பங்கேற்ற மாபெரும் மாரத்தான் போட்டி நடைபெற்றது.இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், முன்னாள் எம்பி தலைமை செயற்குழு உறுப்பினர் சா.ஞானதிரவியம் ஆகியோர் பங்கேற்று மாரத்தான் போட்டியை கொடியசைத்து துவக்கி வைத்தனர். வெற்றி பெற்ற அணிகளுக்கு மொத்தம் ரூபாய் 1 லட்சம் மற்றும் கோப்பை சட்டப்பேரவை தலைவர் மு அப்பாவு வழங்கி பாராட்டினார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.சார்பில் திராவிட பொங்கல்,விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி,துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி.ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி, கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தலின் படி நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூரில்,வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் ஆண்கள் பெண்கள் (இருபாலர்) உள்பட 800 பேர்கள் பங்கேற்ற மாபெரும் மாரத்தான் போட்டி நடைபெற்றது.

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் திராவிட பொங்கலை முன்னிட்டு தி.மு.க. சார்பில் மாபெரும் மாரத்தான் போட்டி நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட வள்ளியூர் வடக்கு,தெற்கு ஒன்றிய தி.மு.க.மற்றும் பணகுடி வள்ளியூர் பேரூர் தி.மு.க.சார்பில் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் வள்ளியூரில் ஆண், பெண் என இருபாலருக்கு மாபெரும் மாரத்தான் போட்டி நடைபெற்றது . வள்ளியூர் கோட்டை அடிப் பகுதியில் இருந்து தொடங்கிய போட்டிகளை சட்ட

பேரவை தலைவர் மு. அப்பாவு,நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல்,முன்னாள் எம்.பி தலைமை செயற்குழு உறுப்பினர் சா.ஞானதி ரவியம் ஆகியோர் கொடியசைத்து போட்டிகளை துவக்கி வைத்தனர்.

இதில் ஆண்கள் இராதாபுரம் சாலையில் 9 கிலோ மீட்டர் தூரம் கும்பளம்பாடு வரையும்,பெண்கள் 5 கிலோமீட்டர் தெற்கு வள்ளியூர் யுனிவர்செல் கல்லூரி வரையும் சென்று போட்டியை நிறைவு செய்தனர்.

நிகழ்ச்சி நிறைவில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று பெண்கள் பிரிவில் ஈரோட்டை சேர்ந்த ஹேமதி முதல் பரிசும்,2 வது பரிசு ராஜபாளையம் நிவேதாவும் 3 பரிசு சென்னையைச் சேர்ந்த மித்திராவும் பெற்றனர்.ஆண்கள் பிரிவில் முதல் பரிசு மாரிசரத்தும், 2வது பரிசு நிதிஷ்குமார், 3வது பரிசு நிகில்குமாரும் பெற்றனர். முதல்பரிசாக ரூபாய் 25,000ம், 2 வது பரிசாக ரூபாய் 10,000 ம், 3 வது பரிசாக ரூபாய் 5,000 ம்,மற்றும் வெற்றிக் கோப்பையும் வழங்கி பாராட்டு தெரிவித்தார்.(அதாவது ஆண்கள் பிரிவுக்கு ரூபாய் 40,000 ம்,பெண்கள் பிரிவுக்கு ரூபாய் 40,000 ம்,) மேலும் இரண்டு பிரிவுகளிலும் தலா 10 பேருக்கு ரூபாய் 1,000 ம் ஆறுதல் பரிசும் வழங்கப்பட்டது.ஆக மொத்த ரூபாய் 1 லட்சம் பரிசு தொகையாக வழங்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,மாவட்ட துணை செயலாளர் நம்பி,பேரூர் செயலாளர்கள் சேதுராமலிங்கம் (வள்ளியூர்) தமிழ் வாணன் (பணகுடி) மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தில்லை,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செல்வ சுதாகர்,ஒன்றிய கவுன்சிலர் சொஸிசிஸ்,ஆச்சியூர் ராமசாமி, ஆனையூர் பஞ்சாயத்து தலைவர் அசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### அ.நடராஜன் தலைமையில்

# பெரம்பலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – எம்,பிரபாகரன் எம்,எல்,ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர்,ஜன,12-

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில்,மாவட்ட அவைத் தலைவர் அ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், செ.அண்ணாதுரை, டி.கே. ராமச்சந்திரன், ஆர்.முருகேசன்,

தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த்தன், ஏ.கேஅருண், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,சன். சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, டாக்டர் செ.வல்லபன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ந. ஜெகதீஷ்வரன், அழகுநீலமேகம்,

பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், ஏ.எஸ். ஜாகிர்உசேன்,

முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர்கள் பிரபா செல்லப்பிள்ளை, க.ராமலிங்கம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன், துணை அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன்,

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா, துணை அமைப்பாளர் ஜி.கே.மூர்த்தி,

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன்,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, தொ.மு.ச.கவுண்சில் பேரவை மாவட்ட தலைவர் கே.கே.எம்.குமார்,

தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பேரவை செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர். வேணுகோபால்,

மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட விவசாய கூலித்தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ. எம். கே. கரிகாலன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி.காட்டுராசா,

கலை இலக்கிய பேரவை மாவட்ட அமைப்பாளர் எம்.சுந்தர்ராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் இரா.ரமேஷ்,

மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம்,

மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம்.ரெங்கராஜ், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், வேப்பந்தட்டை கிழக்கு இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரா.சிவா மற்றும் இ.பி. கணேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தமிழக பாரம்பரிய விழாவாகவும் , உழைக்கும் விவசாய பெருங்குடி மக்களின் அறுவடைத்திருவிழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகின்ற பொங்கல் விழாவை அனைத்து ஒன்றியங்களிலும் சிறப்பாக கொண்டாடுவது எனவும்,

வருகிற 26.01.2026 அன்று தஞ்சையில் நடைபெறும் மகளிரணி டெல்டா மண்டல மாநாட்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து திரளாக கலந்து கொள்வது எனவும்,

பொங்கல் விளை யாட்டுப் போட்டிகளை அனைத்து ஒன்றியங்களிலும் 3 இடங்களில் ஆண்களுக்கும், 3 இடங்களில் பெண்களுக்கும் நடத்துவது எனவும்,

அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகால ஓய்வூதிய கோரிக்கைகளை நிறைவேற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

தமிழர்களின் பாரம்பரிய விழாவான பொங்கலுக்கு, பொங்கல் தொகுப்புடன் பொங்கல் பரிசாக ரூ.3000/ வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

20 இலட்சம் மாணவர்களுக்கு A1 தொழில்நுட்ப வசதியுடன் கூடிய மடிக்கணினி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், மொழிப்போர் தியாகி மூங்கில்பாடி வை.ரெங்கராஜ் மறைவிற்கும், ஒதியம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் வைத்தியநாதன் மறைவிற்கும்,

ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், தெரணி கிழக்கு கிளைக் கழக செயலாளர் அமுல்ராஜ் மறைவிற்கும்,

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் தென்றல் ரவி தந்தை ரெத்தினசாமி மறைவிற்கும்,

ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய முன்னாள் அவைத்தலைவர் சி.கோபால் மறைவிற்கும்,

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், தொண்டமாந்துறை ஊராட்சி, விஜயபுரம் கிளைச் செயலாளர் ராஜ் முகமது மறைவிற்கும்,

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், கூத்தனூர் கிளைச் செயலாளர் செல்லதுரை மறைவிற்கும்,

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், கண்ணாப்பாடி முன்னாள் கிளைச் செயலாளர் சரவணன் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# இன்று (12ம் தேதி) நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என், கௌதமன் அறிவிப்பு!

நாகை, ஜன.12 -

நாகை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம். நாகையில் உள்ள மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் இன்று 12.1.2026 மாலை 5.00 மணிக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ப. செல்வம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு



உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.

1, டெல்டா மண்டல மகளிர் மாநாடு,

2. கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனை நடைபெறுகிறது என்று மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுரை மாவட்டம், மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் தேசிய சுகாதார இயக்க நிதியின் திட்டத்தின் கீழ் ரூபாய் 2.81 கோடி மதிப்பீட்டில் முழு உடல் மல்டி ஸ்லைஸ் சி.டி.ஸ்கேனர் (16 ஸ்லைஸ்) கருவியை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். உடன் மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ப. செந்தில்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார்,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் அருள் சுந்தரேஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர்.இரா.இராஜேந்திரன் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 359 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3 கோடி மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம், செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோருக்கான கைபேசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை நேற்று (11.01.2026) சேலம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.